# மனையறம் சிறக்க வாழ்த்து!

**செல்வி:** ஞான ரோகிணி


**செல்வன்:** ஹரிப்பிரகாஷ்



**நாள்: 27-05-2021**

இல்லறம் என்னும் நல்லறம் தன்னை,
இன்று தொடங்கும் இளையர் தம்மை
சொல்லாம் தமிழில் நெஞ்சம் மகிழ்ந்து,
சுவைபடகூறுமோர் சீரிய வாழ்த்து!
நல்லறம் காக்கும் சீலன் **சூரி**யின்
நன்மகள் இளையள் **ஞானரோ கிணி**யை
இல்லறம் காண கைத்தலம் பற்றுவான்
இனியன் **ஹரிப்பிரகாஷ்** தானும் உவந்தே!

சொல்லிய அறங்களை சுகமாய்க் காத்து,
சொந்த பந்தங்களை மனதிலும் போற்றி
நல்லறம் காட்டிய வழியினில் மகிழ்ந்து,
நனிசீர் பெருமைதரும் மக்களை ஈந்து,
வல்லோன் சேயோன் அருளினில் நிறைந்து,
வான்புகழ்காண இற்றை நாளில்,
நல்மனம் கொண்ட அன்பினால் மகிழ்ந்து,
நட்புடன் பகரும் வாழ்த்து தானே!



- அன்புடன்,

**கு.ப. அசோகன்,**
மேனாள் மதிப்பீட்டு அதிகாரி,
சென்னை சுங்கத்துறை



27-05-2021